அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

O.S.No. 233/2019

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திருமதி. உ. தாரணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பின் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் ஆண்டின் 10வது சட்டத்தில் வகை முறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 06–ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| வா.சா.1 | 06.03.2026 |
| பெயர் ஹரிஸ் | தந்தை/ கணவர் பெயர் |
| தொழில் | வயது |
| இனம் | சமயம் |
| கிராமம் | வட்டம் |

<u>13ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

1. எதற்காக 13ம் பிரதிவாதியை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் பவர்ஆப்அட்டானி பத்திரத்தை பதிவுசெய்தது மற்றும் மற்றபத்திரங்கள் பதிவு செய்தது 13ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் தான் எனவே அவரை சேர்த்துள்ளேன். எனக்கு பத்திரங்கள் பதிவு பற்றி எப்போது தெரியும் என்றால் ஜுன் 2019ல் தெரியும். அதனை தெரிந்தகொண்டபிறகு 13ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் கடிதம் எதுவும் அனுப்பியுள்ளேனா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல செய்துவிட்டேன். வழக்கறிஞர் அறிவிப்பு யார் மீது அனுப்பியுள்ளேன் என்றால் அன்புசெல்வி, சித்திராதேவி, தீபன் குமார் ஆகியோர்க்கு அனுப்பியுள்ளேன்.

2. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 7 வழக்கறிஞர் அறிவிப்பு ஆவணத்தில் 13ம் பிரதிவாதிக்கு எந்த அறிவிப்பும் இல்லை என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களை சரிபார்த்துதான் பதிவு செய்வார்கள் என்றாலும் எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே தான் பிரச்சனை உள்ளது என்றாலும் 13ம் பிரதிவாதிக்கு எதிராக கோரியுள்ள பரிகாரம் தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது, மறு விசாரணை இல்லை.